| O.S.No. 74/2016<br>in Joint Trial<br>O.S.No. 43/2021 | DW1 : திருமதி. அம்பிகா<br>த/பெ. திரு. நித்யாணந்தம் | 12-03-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>அ.வ. எண். 43/2021 வழக்கின் வாதியும், மற்றும் அ.வ.எண். 74/2016 வழக்கில் 2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் 10–ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். வாதிகள் என்ன வழக்கு போட்டுள்ளார்கள் என்று தெரியுமா என்றால் பாகப்பிரிவினை வழக்கு போட்டுள்ளார்கள். வழக்கு சொத்தின் சர்வே எண். 232/1A2C ஆகும். நீளம் 132 அடி, அகலம் 16 1/2 அடி ஆக மொத்தம் 2228 சதுர அடி ஆகும். மேற்படி சொத்திற்கு 4 எல்லைகளில் யார் யார் உள்ளார்கள் என்று தற்போது ஞாபகமில்லை.

2. எனது மாமனார் பெயர் கண்ணப்ப முதலியார். எனது மாமனாருக்கு, பாபு, சுலோச்சனா, மகேஷ்வரி, நித்யாநந்தம், குமார் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். எனது மாமியார் பெயர் சரோஜா. எனது மாமனார் 1983–ல் காலமானார். எனது மாமியார் 2004–ல் காலமானார். வழக்கு சொத்தினை எனது மாமனார் 1976–ம் ஆண்டு ராஜகாந்தன் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார். சுலோச்சனா, மகேஷ்வரிக்கு திருமணம் ஆகி சுமார் 50 ஆண்டுகள் இருக்கும். மேற்படி இருவரும் கடந்த 50 ஆண்டு காலமாக அவரது கணவர் ஊர்களில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1–ம் வாதி வரலட்சுமி திருமணத்திற்கு பிறகு அவரது கணவருடன் வேலைக்காக பெங்களூர் சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். 1–ம் வாதியும், அவரது கணவரும் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் பெங்களூருவில் குடியேறிவிட்டார்கள். 1–ம் வாதியின் கணவர் பாபு பெங்களூருவில் காலமாகிவிட்டார். பாபுவின் வாரிசுகள்தான் 2, 3 வாதிகள் ஆவார்கள்.

3. எனது கணவர் 1-ம் பிரதிவாதி நித்யாநந்தம் காலமாகிவிட்டார். எனது கணவரின் வாரிசுகள்தான் நான் மற்றும் 4 முதல் 6 பிரதிவாதிகள் ஆவோம். தாவா சொத்தில் கீழே 2 கடை, மேலே 2 கடை, பின்பக்கம் 5 வீடுகள் உள்ளது. தாவா சொத்தில் உள்ள ஒரு கடையில் 2-ம் பிரதிவாதி ஹோட்டல் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அதேபோல், மேலே 2 கடைகளில் ஒன்றில் திருமண தகவல் மையமும், மற்றொன்றில் டெய்லர் கடையும் உள்ளது என்றால் சரிதான். அதற்கான வாடகையை 2-ம் பிரதிவாதிதான் வாங்கி வருகிறார் என்றால் சரிதான், வாடகை எங்களுக்கு கொடுக்க மறுக்கிறார். வழக்கு சொத்து கிரையம் வாங்கும்போது காலி மனையாகத்தான் வாங்கப்பட்டது.

4. வழக்கு சொத்தினை 2-ம் பிரதிவாதி கொடுத்த பணத்தினைக்கொண்டு வாங்கப்பட்டது என்றாலும், அதில் உள்ள கடைகள், வீடுகள் அனைத்தும் 2-ம் பிரதிவாதி செலவு செய்து கட்டினார் என்றாலும் சரியல்ல, அந்த இடத்தை மாமனார் வாங்கி வீடு, கடைகள் கட்டினார். எனது மாமனார் கிரையம் வாங்கி கடை, வீடுகள் கட்டினார் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 4, 5 வாதிகளுக்கும், 1-ம் வாதிக்கும் 2-ம் பிரதிவாதிதான் திருமணம் செய்து வைத்தார் என்றால் இல்லை, எனது மாமனார் திருமணம் செய்து வைத்தார். எனது மாமனார், மாமியாரை கடைசி காலத்தில் 2-ம் பிரதிவாதி பாதுகாத்து பராமரித்து வந்து அவர்களுக்கான ஈமச்சடங்குகளை செய்தார் என்று சொன்னால் சரியல்ல. 2-ம் பிரதிவாதி எனது மாமனார் மாமியாரை பராமரிக்கவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5. தாவா சொத்தினை 2-ம் பிரதிவாதி தனிமையில் கிரையம் பெற்றதால் அதில் உள்ள கடை, வீடுகள் 2-ம் பிரதிவாதி செலவு செய்து

கட்டியதால், என் மாமனார், மாமியார் உயிருடன் இருந்தபோதே சொத்தினை 2-ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டனர் என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதி எங்களுக்கு எதிராக தாவா சொத்தில் தடை செய்யக்கூடாது என ஒரு வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கானது அ.வ.எண். 43/2021 இதே நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான், அது பொய்யான வழக்கு ஆகும். தாவா சொத்தில் உள்ள கடைகள், வீடுகளுக்கு 2-ம் பிரதிவாதி குமார் பெயரில்தான் தொழில் வரி, வீட்டு வரி, மின் இணைப்பு ஆகியவை உள்ளது என்றால் சரிதான், அதனை எங்களுக்கு தெரியாமல் அவர் மாற்றிக்கொண்டுள்ளார். தாவா சொத்திற்கான குழாய் இணைப்பு வரிகளை 2-ம் பிரதிவாதிதான் செலுத்தி வருகிறார் என்றால் இல்லை. அதற்கான வரி ரசீதுகளை 2-ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எங்கள் பெயரிலும் உள்ளது, நாங்களும் எங்களது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளோம். தாவா சொத்தினை வைத்து 2-ம் பிரதிவாதி அறிஞர் அண்ணா கூட்டுறவு சங்கத்தில் குடும்ப நலனுக்காக கடன் பெற்று அந்த கடனை பைசல் செய்துவிட்டார் என்றால் அது தவறானது ஆகும்.

6. தாவா சொத்தில் தற்போது நாங்கள் குடும்பம் இல்லை என்றால் சரியல்ல, குடும்பம் இருக்கிறோம். தாவா சொத்தினை நாங்கள் அனுபவிக்கவில்லை என்றாலும், தாவா சொத்து முழுவதையும் 2-ம் பிரதிவாதி குமார்தான் அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தினை எனது மாமனார் அப்போதே 2-ம் பிரதிவாதிக்கு சுவாதீனம் கொடுத்துவிட்டார் என்றாலும், தந்தை என்கின்ற காரணத்தினால் 2-ம் பிரதிவாதி பத்திரப்பதிவு எதுவும் எழுதிக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல, என் மாமனார் யாருக்கும் சொத்தினை எழுதிக்கொடுக்கவில்லை.

7. தாவா சொத்தினை 1-ம் பிரதிவாதி குமார் அனுபவித்து வந்ததை நாங்கள் தடை செய்ததால் எங்களுக்கு எதிராக குமார் புகார் கொடுத்தார் என்றால் சரிதான், நாங்களும் அவருக்கு எதிராக புகார் கொடுத்தோம். நான் புகார் கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், 2-ம் பிரதிவாதி கொடுத்த புகாரின்பேரில் எங்களை அழைத்து விசாரித்து அவர் அனுபவத்தை தடை செய்யக்கூடாது என அறிவுறுத்தி அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கோ, வாதிகளுக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், அச்சொத்தினை 2-ம் பிரதிவாதி கடந்த 35 வருட ஆண்டுகாலமாக அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல, வாடகை மட்டும் வாங்கி கொடுக்க சொல்லி 2-ம் பிரதிவாதியிடம் சொன்னேனா தவிர சொத்தினை ஒப்படைக்கவில்லை. மேற்படி விஷயத்தினை வழக்கிறாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவத்தில் நாங்கள் இருந்திருந்தால் சரியான சர்வே எண், விஸ்தீரனம், 4 எல்லைகள் சொல்லியிருப்பேன் என்றாலும், அவ்வாறு அனுபவத்தில் இல்லாததால்தான் நான் தவறுதலாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

8. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதற்கேற்ப தவா சொத்தில் எனக்கு 5-ல் 1 பாகம் உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண். 43/2021 வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும், அ.வ.எண். 74/2016 வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/– M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**